THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, the 31st March 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Neyveli Lignite

* 472 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any compensation has been paid to all the ryots whose lands have been acquired in the Neyveli Lignite area; and

(*b*) whether any of the ryots have been evicted from the area?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes, Sir. Compensation has been paid to all the ryots whose lands have been acquired except in the cases in which the ryots have refused to receive the compensation amounts. In the excepted cases, compensation amounts due to them have been deposited in the Sub-treasury, Vridhachalam.

(*b*) In cases where the owners of land refused to hand over possession of the lands steps have been taken to enforce surrender of possession of the lands.

SRI N. K. PALANISAMI: பல பேர்களுக்கு நஷ்ட ஈடு இன்னும் கொடுக்காமலேயே அவர்களை வேறு இடங்களுக்குச் செல்லுமாறு சர்க்கார் நிர்ப்பந்திப்பதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN: அவர்கள் இப்பொழுது நாம் கொடுக்கிற நஷ்ட ஈடு போதாது என்று சொல்லி, அதை வாங்க மறுத்து இருக்கிறார்கள். வாங்க மறுத்ததன் காரணமாக அவர்களை வெளியேற்றாமல் இருக்க முடியவில்லை.

* 473 *Q.*—SRI A. GOVINDASAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of villages actually acquired so far under the Madras Lignite (Acquisition of Land) Act, 1953; and

(*b*) whether any of the villages included in the Schedule to the Act have since been excluded from its operation; and if so, their names?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) The answer is placed[a] on the table of the House.

---

[a] Printed as Appendix I on pages 373–374 infra.

[31st March 1958

Sri K. VINAYAKAM : Sir, in the matter of paying compensation to these villagers, what is the *modus operandi* that is being adopted—is the prevailing value of the land in the adjoining areas is being taken into consideration or does the Collector fix the value at his fancy?

The Hon. Sri R. VENKATARAMAN : The value is fixed according to the prices prevalent in 1947 and that is as a result of the Act of 1953 which was passed by this Legislature.

Sri M. SELVARAJ : காம்பென்ஸேஷன் கொடுப்பது போதவில்லை என்று பலரிடமிருந்து சர்க்காருக்கு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா ? சர்க்கார் அதன் மேல் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

The Hon. Sri R. VENKATARAMAN : அவர்களுக்கு, 1947-ம் வருஷத்தில் என்ன மதிப்பு இருந்ததோ அதைக் கொடுக்கவேண்டுமென்று நமது சட்டசபையில் சட்டம் இயற்றி இருக்கிறோம். அதன்படி கொடுக்கப் படுகிறது. அது போதாது என்று பல புகார்கள் சர்க்காருக்கு வந்திருக் கின்றன. அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

Sri S. M. ANNAMALAI : சில கிராமங்களை நீக்குவதாக உத்தே சித்துக்கொண்டிருப்பதாக ரிப்போர்ட்டில் கண்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN : அவை லிக்னைட் கார்ப்பொ ரேஷனுக்கு தேவையில்லை.

Sri N. K. PALANISAMI : நஷ்டஈடு கொடுக்கும் விஷயமாக சர்க்கார் தனியாக ஏதாவது டிரிப்யூனலை ஏற்படுத்தியிருக்கிறார்களா ? டிரிப்யூனல் விசாரித்து இவ்வளவுதான் கொடுக்கவேண்டுமென்று சொல்லி யிருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : அதற்காக சட்டமே இயற்றியிருக்கிறோம். 1947-ல் இருந்த மதிப்புத்தான் கொடுக்கப்பட வேண்டுமென்று சட்டத்தில் சொல்லியிருக்கிறது. " **Land Acquisition Act** " பிரகாரம் கலெக்டர் மதிப்புப் போடுகிறார்கள். அது போதாது என்று நினைக்கிறவர்களுக்கு அப்பீல் செய்வதற்கு " **Land Acquisition Act** " லேயே வழிகள் இருக்கின்றன.

Sri A. VEDARATHNAM : இந்த நிலங்களுக்கு அக்கம் பக்கத்திலுள்ள நிலத்தின் கிரயம்தானே இப்பொழுது கொடுக்கப்படுறது ? அப்படியானால், அக்கம் பக்கத்திலுள்ள நிலத்தின் கிரயம் அப்பொழுது என்ன, இப்பொழுது என்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN : 1947-ம் வருஷத்திய மதிப்புக் கொடுக்கப்படுகிறது. அப்பொழுது இருந்த மதிப்பைவிட, அதுவும் லிக்னைட் கார்ப்பொரேஷன் வந்த பிறகு, மதிப்பு ஏராளமாக உயர்ந் திருக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

Sri V. K. KOTHANDARAMAN : அப்பொழுது இருந்த மதிப்பு எவ்வளவு ? இப்பொழுது சர்க்காருடைய மதிப்பு எவ்வளவு ? அதை வைத்துத்தானே அவர்கள் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று கேட் டார்கள். அப்படிக் கொடுக்க வேண்டியது நியாயம்தானே ? அப்படி இருக்கும்போது " புல் டோஸர்களை " வைத்து கட்டிடங்களை இடித் திருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதை சர்க்கார் தவறு என்று ஒத்துக்கொள்கிறார்களா ?

31st March 1958]

THE HON. SRI R. VENKATARAMAN : மதிப்பு சரியா, நியாயமா என்பதை "Land Acquisition Act" பிரகாரம் கலெக்டர் தீர்மானிக்கிறார்கள். அது அவர்களுக்குப் பிடித்தமாகயில்லை என்று சொன்னால், அதன்மேல் அப்பீல் போடுவதற்கு வழியிருக்கிறது. ஆகவே அதற்குத் தடை செய்வது அவ்வளவு சரியல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY : 1947-க்குப் பிறகு புதிதாக வீடுகள் பழுது பார்க்கப்பட்டாலும், கிணறுகள் மராமத்து செய்யப்பட்டாலும் அவைகளுக்கு காம்பென்சேஷன் கொடுக்காதது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? அவைகளுக்கும் கொடுக்க அரசாங்கம் உத்திரவிடுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : 1947-க்குப் பிறகு "Agricultural improvements" செய்யப்பட்டிருந்தால் அதற்குக் காம்பென்ஸேஷன் கொடுக்கப்படும். ஆனால் வேறு improvements செய்திருந்தால் கொடுக்கவேண்டியதில்லை என்று சட்டமிருக்கிறது.

SRI V. SUBBIAH : இப்பொழுது இருக்கக்கூடிய கோர்ட் பீஸ் கட்டணம் அதிகமாயிருப்பதன் காரணமாக, ஒரு ஏக்கர் நிலம் ரூபாய் 2,000 ஆக மதிப்பு இருந்தாலும், 1,000 அல்லது 500 என்று கிரயம் போட்டு எழுதுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதன் மதிப்பீட்டை வைத்து "Land Acquisition Act" பிரகாரம் கொடுப்பதாய் இருந்தால், அது எவ்வளவு தூரம் அவர்களை பாதிக்கும் என்று கனம் மந்திரி அவர்கள் சொல்லுவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அவ்வாறு குறைவாக மதிப்பைப் போட்டு பத்திரங்கள் எழுதுவது சட்டத்திற்கு விரோதமானது. குற்றமும் கூட. அவ்வாறு எழுதியிருக்கிறார்கள் என்றால் கலெக்டரிடத்தில் எடுத்துச் சொல்லலாம்.

MR. SPEAKER : கேள்விகள் 474, 475, 476 மூன்றும் நெய்வேலித் திட்டத்தைப்பற்றியிருப்பதால் அவைகளை ஒன்றாக எடுத்துக்கொள்ளலாமென்று நினைக்கிறேன். அங்கத்தினர்கள் அந்த மூன்று கேள்விகளின் பேரிலும் உப கேள்விகள் போடலாம்.

* 474 *Q.*—SRI A. GOVINDASAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have ordered the eviction of the owners of shops and houses in the vicinity of the Neyveli Railway Station?

THE HON. SRI R. VENKATARAMAN : The lands in the vicinity of the Neyveli Railway Station have been acquired for the Neyveli Lignite Corporation (Private) Limited, Neyveli. As the owners of houses and shops in this area refused to hand over possession, action has been taken by the Special Tahsildar under section 47 of the Land Acquisition Act to enforce surender of possession of the lands.

Sir, are supplementaries to be answered or shall I read the main answers ?

MR. SPEAKER : You can read the written answers.

SRI K. VINAYAKAM : It would be convenient if supplementaries are answered separately for each question, Sir.

THE HON. SRI R. VENKATARAMAN : It is convenient to answer supplementaries for each question.

MR. SPEAKER : I have no objection.